**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 04 October-December 2023**

# “சோ.தர்மன் நாவல்களில் வேளாண்மக்களின் வாழ்வியல்”

**நெறியாளார்:**
முனைவர் கி.நந்தினி
உதவிப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி) -சேலம்-16

**ம.கல்பனா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
சேலம்-16

**ஆய்வுச்சுருக்கம்:**
இறைவனையும் மன்னர்களையும் வள்ளல்களையும் பாடிய நூல்களின் வரிசையில் ஏர் எழுபதும், பள்ளு இலக்கியங்களும், மிகுத்து பாடுவன வேளாண்மையும் வேளாண்மையை உயிரெனப் போற்றும் வேளாண்மக்களின் வாழ்வியலையும் ஆகும். இது வேளாண் குடிகளுக்கே உண்டான சிறப்பை காட்டுகிறது. தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கியமான உணவு உற்பத்திக்களமாக இருப்பது வேளாண்மைத் தொழிலே ஆகும். வேளாண்தொழில் மரபுகளையும், தொழில்சார் அனுபவ அறிவினையும், அதன் மூலம் உத்திகளையும் கடைபிடித்து அறநெறிப்பண்பில் சிறந்து விளங்குகின்ற வேளாண் குடிகளின் வாழ்வியலை சோ.தர்மன் அவர்களின் நாவல் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை:**
தமிழகத்தில் வேளாண்மை என்பது மிக நீண்ட வரலாற்றை கொண்டது என்பதற்கு சங்க இலக்கியங்களில் அகப்புற சான்றுகள் காணப்படுகின்றன. வேளாண்மை என்பது மனிதன் நாடோடிகளாக இருந்த நிலையை மாற்றி ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலையாக அமைதியாக வாழ வழிகாட்டிய முதல் மாற்றமாகும். வோளாண்மை முதன்மை தொழிலாக மாறிவிட்ட சூழலில் மக்கள் கிராமங்களை ஏற்படுத்தி நிரந்தரமாய் வாழத்தொடங்கினர். அவ்வாறு தொடங்கிய வேளாண் மக்களின் வாழ்வியலில் அறம், அனுபவ அறிவு பயன்பாடு, பொருளாதாரம், சாதிய ஏற்றத்தாழ்வுகள் போன்று பல்வேறு வகையான வாழ்க்கை சூழலில் வேளாண் மக்களின் வாழ்வியல் நகர்கின்றன. அவ்வகையில் சோ.தர்மன் அவர்களின் தூர்வை, கூகை, சூல் ஆகிய நாவல்களின் வாயிலாக வேளாண ் மக்களின் வாழ்வியலை சில உதாரணங்களுடன் இக்கட்டுரையில் காண்போம்.

**இயற்கையை போற்றி வாழ்தல்:**

வேளாண்மை ஒரு பண்பட்ட தொழிலாகவே இருந்து வந்துள்ளது. கால மாற்றம், சமூக மாற்றம், தொழில் மாற்றம் எதுவாயினும் சமூகத்தின் அடிப்படை தேவை உணவாகும். எத்தனையோ நவீன தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டு பல தொழில்கள் உருவானாலும் உணவிற்கான ஒரே களமாக திகழ்வது வேளாண்மைத் தொழிலே. அத்தகைய தொழிலை காலம் காலமாக செய்யும் தொழில் மரபும் அனுபவ அறிவும் வேளாண் மக்களிடையே இருந்தது. இயற்கையின் கொடைகளை சரிவர பயன்படுத்தி இயற்கையை பேணிக்காத்தனர்.

**" திங்களைப் போற்றுதும் திங்களைப்**
**போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு**
**போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை**
**போற்றுதும்"**

என்ற பாடல் இயற்கையை வழிபட்டதற்கான சான்றாக அமைகிறது. இயற்கைக்கு முக்கியத்துவம் அளித்து வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். வேளாண்மைக்கு ஆதாரமாக திகழ்வது மழைநீரே, மண் இல்லாமல் கூட பயிர் வளர்க்க அறிவியல் துணைபுரிகிறது. ஆனால் நீரயின்றி சிறுபுல் கூட முளைக்காது என்கிறார் வள்ளுவர்.

**நீர்இன்று அமையாதுஉலகு எனின் யார்யர்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு**

நிலத்தின் முக்கியத்துவத்தையும் நீரின் முக்கியத்துவத்தையும் அறிந்த நம் முன்னோர்கள் அதனை பாதுகாக்கும் நுட்பத்தினையும் அறிந்திருந்தனர். மழைவளத்திற்கு ஆதாரமாக திகழும் மரங்களை தெய்வங்களாக வணங்கி அறிவியலை ஆன்மீகமாக்கினர்.

**"ஆலமரம் அய்யனார் சாமி, வேப்பமரம் மாரியத்தா, அரச மரம் பிள்ளையாரு, வன்னி மரம், புங்க மரம், நாகலிங்க மரம், மாமரம் எல்லாமே கடவுளோடயும் இல்லனா கடவுயோட சாத்திரங்களோடயும் சம்பந்தபடுத்தி தான் பாத்தோம் வாழ்ந்தோம் "**

என்பதனை கூகை நாவலில் கிராம மக்கள் மரங்களை கடவுளாக வழிபட்டதனை ஆசிரியர் விளக்கியுள்ளார். உயிரை பறிக்கும் எமனைக்கூட கடவுளாக வணங்கியவர்கள் நம் முன்னோர்கள். வாழவைக்கும் இயற்கையை போற்றி புகழ்ந்து இயற்கை தான் அனைத்து சக்திகளுக்கும் முதன்மையானது என்பதனை நம் வேளாண் மக்கள் பறைசாற்றுகின்றனர்.

**வேளாண் உத்திகளை கையாளுதல்:**

வேளாண் தொழிலின் பட்டறிவை தொழில் மரபாக கொண்டவர்கள் வேளாண் தொழில் மரபினரே ஆவர். கரிசல்காட்டை விதைப்புக்கு தயார்படுத்துவது கோடை உழவுதான். கண்மாயின் கரம்பை மண்ணையும் சந்தனமாக மக்கிய குப்பையையும்

கரிசல் மண்ணோடு கலந்து பக்குவப்பட வைப்பதே இந்த கோடை உழவு தான். உழுது பண்பட்ட நிலம் மழைக்காக காத்திருக்கும்.

**“பட்சி ஜோஸ்யம் எப்பவும் தப்பனதே இல்லையே, கரெக்டா இருக்கும் நூறு கூட்ட எண்ணிப் பார்த்தன் பாத்ததுல வடக்கத்தி மழை தான் ஜாஸ்தினு சொல்லுது பட்சி”**

என்ற முத்துவீரன் தாத்தாவின் கணிப்பு என்றும் தப்பியதே இல்லை. மழையை வரவழைக்கவும் அதன் அளவையும் முன்கூட்டியே கணிக்கும் அனுபவ அறிவு உடையவர்களாகவும் மழையை வரவழைக்கவும் வழியனுப்பவும் என்று வளமைச் சடங்குகளை பின்பற்றியும் பருவத்தே பயிர் செய்வதும் அறுவடை செய்வதும் என்று காலத்தின் நிலையை அறிந்து செயல்பட்டனர். வேளாண்மை சார்ந்த வளமை சடங்குகளுள் விதைப்பு சடங்கும் நடவு சடங்கும் மிக இன்றியமையாதது. நிலத்தை பொருத்தும் நீரை பொருத்தும் நெல் வேளாண்மையில் விதைப்பும் உண்டு நடவும் உண்டு. நாற்றாங்காலில் முளைகட்டிய நெல் விதைகள் தூவி நெல் விதைகள் நாற்றாக முளைத்த பிறகு அந்நெல் நாற்றை நடவு வயலில் நடுவதையே நடவு என்று குறிப்பர். நடவு முடிந்ததும் பயிருக்கு தேவையான நீர்பாய்ச்சுதல் உரமிடுதல் களை பரித்தல் ஆகிய முறைகளை தொடர்ந்து அறுவடை பயன்பாடு. அக்காலத்து வேளாண்மக்கள் பொருளீட்டுவதே குறிக்கோளாக அல்லாமல் உணவு விளைவித்தலையே குறிக்கோளாக கொண்டிருந்தனர்.

**அறம்சார் வாழ்வியல்:**

மனித வாழ்வானது மாண்பு பெற வேண்டுமெனில் அறம் போற்றுதல் இன்றியமையாததாகும். நம் சங்கத்தமிழர்கள் போரிலும் அறம் பிறழக்கூடாது என்று விரும்பியவர்கள். அறம் செய்யும் எண்ணத்தை மக்கள் மனங்களில் விதைக்க வேண்டும் என்று “அறம் செய்ய விரும்பு” என்று கூறியிருக்கிறார் ஔவையார். அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக பகுத்து கூறுவது நம் தமிழர் மரபு.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு”**

அனைத்து உயிர்களுக்கும் இன்பமானது தேவை அவ்வின்பத்திற்கு பொருள் தேவைப்படுகிறது. அத்தகைய பொருளினை அறவழியில் ஈட்டுதல் வேண்டும். இதுவே நம் பண்டைய தமிழர்களின் வாழ்வியல் அறமாக இருந்தது. பிற உயிர்களுக்காக உழைக்கும் வேளாண் குடிகளின் அறம் சார்ந்த பண்புகள் அவர்களின் குடிபிறப்பிலே தோன்றியதாக அமைகிறது. “உழவனே பசிப்பிணி போக்குவோன்”. “பசிப்பிணி மருத்துவன்” என்று புறநானூற்று பாடல் சிறப்பிக்கின்றது. வேளாண் மக்களின் அறம் சார்ந்த செயலுக்கு சான்றாக சோ.தர்மன் அவர்கள் தனது சூல் நாவலில்

**“பெரும்பாலும் ஊருக்கு வரும் பண்டாரங்கள் பரதேசிகள் தங்கினால் ஊர் இளவட்டங்களே தெருவில்போய் வீடு வீடாக சோறு வாங்கி கொடுப்பது வழக்கம்”**[6]

தங்களது ஊருக்குவரும் நாடோடிகள் பண்டாரங்கள் போன்றோர்கள் வந்தால் வீடுவீடாக சென்று பிச்சை எடுப்பதை ஊர் மக்கள் தங்களுக்கான அவமானமாக கருதினர். தங்கள் ஊருக்கு வந்து பிறர் பிச்சை எடுப்பதை அவர்கள்

விரும்பவில்லை. வாயை திறந்து அவர்களாக பிச்சை கேட்கும் முன்னே அவர்களின் தேவை அறிந்து ஊர் மக்களே அவர்களுக்கான உணவு தேவையை தீர்க்கின்றனர். மேலும் இதில் கொப்புளாயி என்ற கதாபாத்திரம் தனது வீட்டு முற்றத்தில் நின்றாலே பாலும், தயிரும், மோருமாய், மண் கலயத்துடன் முன்னிற்பவள். வழிப்போக்கர்களுக்கு மரங்களை நட்டு வைத்து வனம் ஆக்கி இளைப்பாறுதல் அளித்து பசிக்கு மோர் பானையும் வைத்து அறம் வளர்த்த இன்றையகால மணிமேகலையாக கொப்புளாயி காணப்படுகிறாள். "பணத்தை மென்று தின்னு தண்ணி குடிக்கவா முடியும்" என்று அறியாமையால் வாழும் அவளுக்கு தெரியவில்லை பணம் கொடுத்தால் சோறு என்று.

தூர்வை நாவலில் மினுத்தானும் மாடத்தியும் செழுமையான வேளாண் குடிகளாக வலம் வருகின்றனர். இருவரின் பண்பும் தன்னுடைய நிலத்தில் விளைந்த மிளகாய் வத்தல், உளுந்து, பாசிப்பயிறு, பூசணிக்காய் போன்றவற்றை நட்பின் அயைடாளமாக மற்றவர்களுக்கு அளிப்பது ஒருவகையான சுமூகமான உறவு நிலையை விவரிக்கிறது. தனது நிலத்தில் விளையும் விளைச்சல்களை அள்ளி கொடுக்கின்ற மனம் படைத்தவர்களாக வேளாண் மக்கள் இருந்ததை ஆசிரியர் விளக்குகின்றார்.

**மனிதநேயம் போற்றுதல்:**

சக மனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனித நேயம் எனக் கூறலாம். இதில் பிற உயிர்களுக்காக இரக்கப்படுவது என்பது மனித நேயத்தில் சிறப்பானதொரு இடம்பெருகிறது. ஒரு காலத்தில் காடு கரைகள் எல்லாம் பிராமணர்களின் உடைமைகளாக இருந்தன. கல்வி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்த பிராமணர்கள் பலர் நகரத்திற்கு புலம்பெயர ஆரம்பித்தனர். அவ்வாறு செல்கையில் தங்களிடம் தொழில் செய்த மக்களுக்கு நிலங்களை குத்தகைக்கும் சில விலைக்கு விற்றும் சில தானமாக கொடுத்தும் சென்றனர். அவர்களின் வகையில் கூகை நாவலில் நடராஜ ஐயர் என்ற கதாபாத்திரம் அமைந்துள்ளது. நடராஜ ஐயர் பள்ளக்குடி ஜனங்களின் குலதெய்வமாக விளங்கியவர், ஊரைவிட்டு செல்லும்போது தனது நிலங்களை தன் நிலத்தில் வேலை பார்த்த அனைவருக்கும் கிரைய பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு செல்கிறார்.

**"இப்ப அவரவரு பாத்துகிட்டு இருக்கிற வயக்காட்ட அவரவரு பேருக்கே சொந்தமாக்கி தர்மமா தானமாக குடுக்கற மாதிரி எழுதி கொண்டாந்திருக்கேன் பேர்கள படிக்க படிக்க ஒவ்வொரு ஆளா வந்து வாங்கிக் கோங்க"**

சீனிக்கிழவன் சொன்னால் சரியாக இருக்கும் என்ற அளவுக்கு ஐய்யருக்கும் பள்ளக்குடி சீனிக்கிழவனுக்குமான உறவு இருந்தது. சாதியை தாண்டிய மனிதநேய பண்பு உயர்ந்திருப்பதை காண முடிகிறது. மனிதநேயத்தோட நடந்து கொண்டு ஐய்யரின் வீடு சீனி கிழவனுக்கு கோயிலானது.

உழவு மாடுகள் வாங்க சென்ற இடத்தில் பெருமாளின் பணம் களவு போய்விட்டது. அதிர்ச்சியில் செய்வது அறியாது திகைத்து நின்றான். திக்கற்று நின்றவனுக்கு

தெய்வமே துணையாக வந்ததுபோல் கவுண்டர் அவனுக்கு பிடித்த மாட்டையே அவிழ்த்து கொடுத்து அனுப்பி வைத்தார்.

**“போ கொண்டுபோயி நல்லா வெவசாயம் பாரு அடுத்த வருசம் வெள்ளாமை எடுத்துட்டு வரும்போது பணம் கொண்டு வந்து குடு போதும்”**

அன்று மாடு வாங்க முடியாமல் போயிருந்தால் அந்த வருடம் விவசாயம் செய்திருக்க முடியாது. தக்க நேரத்தில் பெருமாளுக்கு உதவிய மனிதநேய பண்பு தலையாயதாக கருதப்படுகிறது.

**முடிவுரை:**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு துணையாக இருப்பது வேளாண்மைத் தொழிலேயாகும். அத்தகைய வேளாண் தொழிலை சிறப்புற செய்யும் வேளாண்குடி மக்களின் வாழ்வியலில் கடைபிடிக்கின்ற அனுபவ அறிவும், அறநெறிப்பண்புகளும், மண்ணை மட்டும் அல்லாமல் நாட்டினையும் வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. வேளாண்மைக்கும் வேளாண்மக்களுக்கும் என்றும் உறுதுணையாக நின்று நம் அனைவரின் நலத்தையும் வளத்தையும் காத்திடுவோம்.

**அடிக்குறிப்பு:**

1. சிலப்பதிகாரம் - புலியூர்கேசிகன் - பாரிநிலையம் சென்னை-08 ப-25 பா-1
2. திருக்குறள் - கோவிந்தராசன் - பெங்க;ர் தமிழ்ச்சங்கம் பெங்க;ர் - 42 குறள்-10
3. கூகை - சோ.தர்மன் - அடையாளம் பதிப்பகம் திருச்சி - 10 ப-214
4. சூல் - சோ.தர்மன் - அடையாளம் பதிப்பகம் திருச்சி -10 ப - 6
5. தொல்காப்பியம் - புலியூர்கேசிகன் - சாரதா பதிப்பகம் - சென்னை 14 ப-249 நூற்-1
6. சூல் - சோ.தர்மன் - அடையாளம் பதிப்பகம் திருச்சி 10 ப -138
7. கூகை - சோ.தர்மன் - அடையாளம் பதிப்பகம் - திருச்சி 10 ப - 213
8. தூர்வை - சோ.தர்மன் - அடையாளம் பதிப்பகம் - திருச்சி 10 ப - 51